

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் திருபெரும்புதூர் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் இந்தியா கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் டி. ஆர் .பாலு அவர்களின் அறிமுகம் கூட்டம் குரோம்பேட்டையில் உள்ள திடலில் மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் தா.மோ அன்பரசன் அவர்கள் தலைமையில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. வரவேற்பு உரையில் நடைபெற்ற கூட்டத்தில் கழகப் பொருளாளரும் கழகத்தின் வெற்றி வேட்பாளர் டி. ஆர். பாலு இந்தியா கூட்டணி கட்சிகளில் தலைவர்கள் செயலாளர்கள் சிறப்புரை ஆற்றினார்கள் மீ. அ. வைத்தியலிங்கம் எஸ். ஆர். ராஜா எம்.எல்.ஏ., மேயர் வசந்தகுமாரி, மண்டல தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, வே. கருணாநிதி, பகுதி கழகச் செயலாளர் த. ஜெயக்குமார், இ. எஸ். பெர்னாட், ஏ .கே. கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி. கே .ரவி மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்



திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில், திருச்சி அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோவிலில் அமைந்துள்ள, திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனம் 27 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஆளுகைக்கு உட்பட்ட , தருமபுரம் ஆதீனம் மௌன மடம், கட்டளை விசாரணை ஸ்ரீமத் மௌன திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகளை, இந்தியா கூட்டணி சார்பாக, திருச்சி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் துரை வைகோ நேரில் சந்தித்து, வாழ்த்து பெற்றார் . இந்நிகழ்வில், திருச்சி கிழக்கு தொகுதி பார்வையாளர், மாநகரச் செயலாளர் மு.மதிவாணன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மதிமுக தொகுதி பொறுப்பாளர் புதூர் மு.பூமிநாதன், துணைப் பொதுச்செயலாளர் மருத்துவர் ரொஹையா, திருச்சி மாநகர் மாவட்டச் செயலாளர் வெல்லமண்டி இரா.சோமு, திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் மணவை தமிழ்மாணிக்கம் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

## தென்சென்னை நாடாளுமன்ற வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனுக்கு

# சைதைத் தொகுதி முழுவதும் உள்ள 20 மசூதிகள் முன்பு வாக்கு சேகரிப்பு!

### மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் - எச்.ஜவாஹிருல்லா பங்கேற்பு!

### மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் அறிவிப்பு

சென்னை,மார்ச்.29-

தென்சென்னை நாடாளுமன்ற வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனுக்கு சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி முழுவதும் உள்ள 20 மசூதிகளில் வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சி இன்று 29.3.2024 மதியம் 12 மணிக்கு தொடங்கி நடைபெற உள்ளது.

சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலையில் உள்ள தஸ்தகீர்சாகிப் ஜாமியா மஸ்ஜித் மசூதியில் காலை 12 மணியளவில் சைதை கிழக்குப் பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் வாக்கு சேகரிக்கும் நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் மு.மகேஷ்குமார், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

ஜாபர்கான்பேட்டையில் உள்ள மஸ்ஜிதே தக்வா மசூதியில் வட்ட கழக செயலாளர் அட்கோ கமலநாதன், தலைமையில் வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

சாரதிநகரில் உள்ள மஸ்ஜிதே ஹமைதியா மசூதியில் வட்ட கழக செயலாளர் சை.மு.சேகர் தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

பால்மோர்தெருவில் உள்ள மஸ்ஜிதே ரஹமான் மசூதியில் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், ஜி.ஜே.மோசஸ் ஆகியோர் தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மசூதிப்பள்ளத்தில் உள்ள சகததுல்லாகான் ஜாமியா மஸ்ஜித் மசூதியில் பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

கோதாமேட்டில் உள்ள மஸ்ஜிதே நூர் மசூதியில் சிறுபான்மை பிரிவு மாவட்ட துணை அமைப்பாளர் தமீம்அன்சாரி தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

ஜெயராம் தெருவில் உள்ள மஸ்ஜிதே நபில் மசூதியில் தலைமைப் பொதுக் குழு உறுப்பினர் சைதை மா.அன்பரசன் , வட்ட கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம் தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

தாடண்டர்நகர் அரசு ஊழியர் குடியிருப்பு பகுதியில் உள்ள மசூதியில் சைதை மஜீத் தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

ரங்கராஜபுரம் மஸ்ஜிதே இப்ராஹிம் மசூதியில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

வேளச்சேரி சாலையில் உள்ள மஸ்ஜிதே முகம்மதியா மசூதியில் வட்ட கழக செயலாளர் ஆரி என்கிற ஆரோக்கியராஜ் தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

ஈக்காட்டுத்தாங்கலில் உள்ள மஸ்ஜிதே அல்ரஹ்மான் மசூதியில் வட்ட கழக செயலாளர் எஸ்.இராதாகிருஷ்ணன் தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

செட்டித்தோட்டத்தில் உள்ள மஸ்ஜிதே அல்ஹீதா மசூதியில் சிறுபான்மை பிரிவு பகுதி அமைப்பாளர் எம்.எஸ்.ஷேக் தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

ஒய்.எம்.சி.ஏ. அருகில் உள்ள ஒய்.எம்.சி.ஏ., மஸ்ஜித் மசூதியில் சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் சையத் கரிமுல்லா தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

லேபர்காலனியில் உள்ள மஸ்ஜிதுல் முபாரக் மசூதியில் வட்ட கழக செயலாளர் தா.மோகன்குமார் தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

கோட்டூர்புரத்தில் உள்ள மஸ்ஜிதே அன்சாரி மசூதியில் வட்ட கழக செயலாளர் க.மணி தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

கோட்டூரில் உள்ள மஸ்ஜிதே ஆயிஷா மசூதியில் வட்ட கழக செயலாளர் சண்முகம் தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

கோட்டூரில் உள்ள மஸ்ஜிதே அபீப் மசூதியில் மாவட்ட பிரதிநிதி சலாம் தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மடுவின்கரையில் உள்ள மஸ்ஜிதே நூர் மசூதியில் தலைமையில் பகுதி அவைத் தலைவர் இ.முருகேசன் தலைமையில் வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

நேருநகர் வேளச்சேரியில் உள்ள மஸ்ஜிதேஇலாயி மசூதியில் வட்ட கழக செயலாளர் எஸ்.பாட்சா வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மஸ்ஜிதே தக்வா, ஜாபர் கான் பேட்டை - களக்காடி எல்லப்பன், வி.பி.ஜானகிராமன், அட்கோ.கமலநாதன், வீ.மதிவாணன், ஜி.கே.ராமச்சந்திரன்

மஸ்ஜிதே ஹைமைதியா, சாரதிநகர் - சை.மு.சேகர், டி.என்.சிவமணி, எம்.எஸ். ஹரிபாபு,

மஸ்ஜிதே ரஹமான், பால்மோர் தெரு - வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், கவிதாகவுதமன், த.சம்பத், ந.தமிழரசு,

சகததுல்லாகான் ஜாமியா மஸ்ஜித், மசூதி பள்ளம் - எம். கிருஷ்ணமூர்த்தி, சைதை சாதிக்,

மஸ்ஜிதே நூர், கோதாமேடு - ஆர்.ரமேஷ், எம். நாகா, பால்கார் ஏ.ரவி,

மஸ்ஜிதே நபில், ஜெயராம்தெரு - எஸ்.பி.கோதண்டம், கிண்டி ஆர்.எல்.செல்வம், பொன்.ஜெய்சிங், ஆர். கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன்

சிறுபான்மை நல உரிமைப் பிரிவு மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் சைதை சாதிக் அறிவித்துள்ளார்.

## தென் சென்னையின்

# இரயில்வே துறை சார்ந்த தேவைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துள்ளேன்!

### தமிழச்சி தங்கபாண்டியன் பிரச்சாரம்!

சென்னை, மார்ச் 29-

நேற்று (28.03.2024), தியாகராயர் நகரில், 142வது வட்டத்திற்கு உட்பட்ட சி.ஐ.டி. நகரில், போக் சாலை, சாதூல்லா ரோடு, வ.உ.சி தெரு, மேட்லி தெரு, காமராஜர் காலனி, பர்கிட் ரோடு, மன்னார் தெரு, தாமோதரன் தெரு உள்ளிட்ட பகுதிகளில், தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் முனைவர்.த.சுமதி (எ) தமிழச்சி தங்கபாண்டியன், மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, தலைமையில் வாக்கு சேகரித்தார்.

அப்போது செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியன், கடந்த மூன்று நாட்களாக வாக்கு சேகரித்து வருகிறேன்; செல்கின்ற இடமெல்லாம் பொதுமக்களும், கழகத்தினரும், தோழமைக் கட்சியினரும் அளிக்கும் வரவேற்பையும், அன்பையும், எழுச்சியையும் பார்கின்ற போது, திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி, நாற்பது தொகுதிகளிலும் வெற்றி பெறுவது உறுதி எனத் தெரிவித்தார்.

நீங்கள் இரயில்வே துறையில் தொகுதிக்காக எந்த கோரிக்கையும் வைக்கவில்லை என்று எதிர்க்கட்சியினர் கூறுகிறார்களே என்று பத்திரிகையாளர் கேட்டதற்கு, அதற்கு பதிலளித்த வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியன், தொகுதி முழுவதும் உள்ள இரயில்வே துறை சார்ந்த பிரச்சனைகளுக்காக நான் 2019 ல் வெற்றி பெற்றது முதல் 2024 வரை அவ்வபோது ஆய்வு மேற்கொண்டு தென்னக இரயில்வே பொது மேலாளருக்கு குறைகளை மனுவாக அளித்துள்ளேன். ZRUCC கூட்டம் அனைத்திலும் கலந்துகொண்டு, தொகுதிக்குட்பட்ட அனைத்து இரயில்வே துறை சார்ந்த பிரச்சனைகளுக்காக பேசியுள்ளேன்.

அதன் விளைவாக மாம்பலம், சைதாப்பேட்டை இரயில் நிலையங்களில் பழுதடைந்த மேற்கூரை மாற்றப்பட்டது, தரமணி இரயில் நிலைய சாலையில் ரூ.1 கோடி 68 இலட்சம் மதிப்பீட்டில் 100க்கும் மேற்பட்ட மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன, மயிலாப்பூர் முண்டக்கண்ணியம்மன் கோவில் இரயில் நிலையத்தில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான நுழைவு வாயில் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது;

வேளச்சேரி புனித தோமையர் மலை MRTS இணைப்பிற்காக, பாராளுமன்றத்தில் பலமுறை பேசியும், ரயில்வே அமைச்சரைச் சந்தித்து கோரிக்கை விடுத்ததன் காரணமாக, நிலம் கையகப்படுத்துதல் முடிக்கப்பட்டு, பணி மீண்டும் துவங்கப்பட்டுள்ளது; மெட்ரோ இரயில் குறித்தும் பல முறை நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்திருக்கிறேன் எனத் தெரிவித்தார்.

பரப்புரையில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன், கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சியினர் கலந்து கொண்டனர்.

## மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி

# வேட்பாளர் தயாநிதி மாறன் பிரச்சார விவரம்!

### 29.3.2024 வெள்ளிக்கிழமை



29.3.2024 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு புரசைவாக்கம் தாக்கர் தெருவில் உள்ள சர்ச்சில் பாதிரியாரை சந்தித்து வாக்கு சேகக்கிறார்,

5.30 மணிக்கு துறைமுகம் கிழக்கு 56வது வட்டம் செயின்ட் சேவியர் தெரு பிரகாசம் சாலை சந்திப்பில் பிரச்சாரம் ஆரம்பம்,

பிடாரியார் கோயில் தெரு, அம்மன் கோயில் தெரு, வெங்கடேசன் தெரு, மதுரவாசல் தெரு, சண்முகராயர் தெரு, தைத்தியப்பன் தெரு, பி.ஆர். கார்டன், ஆசீர்வாதபுரம்,

அதனைத் தொடர்ந்து இப்ராஹிம் சாலையும் பவளக்காரத் தெரு சந்திப்பில் (56ஆ வட்டம்) பிரச்சாரத்தை தொடர்ந்து ராமசாமி தெரு, வெங்கட ஐயர் தெரு, சைவ முத்தையா தெரு, செங்கழுநீர் பிள்ளையார் கோயில் தெரு, நைனியப்பன் தெரு, சவுரி முத்து தெரு, மலையப்பன் தெரு, வள்ளுவர் நகர், கச்சாலீஸ்வரன் தெரு, சாலை விநாயகர் தெரு என்று வள்ளுவர் நகரில் பிரச்சாரம் செய்கிறார்.

## மத்திய சென்னை, வடசென்னை தொகுதிகளில்

# தயாநிதி மாறன் - கலாநிதி வீராசாமி வாக்குச் சேகரிப்பு!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டம் மத்திய சென்னை, வடசென்னை, நாடாளுமன்ற இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் திரு. தயாநிதிமாறன், டாக்டர். கலாநிதி வீராசாமி ஆகியோரை ஆதரித்து நடைபெறும் வாக்கு சேகரிப்பு, மற்றும் தேர்தல் பணிமனை திறப்பு விவரம்.

| நாள்/நேரம் | பொருள் | இடம் |
|---|---|---|
| 29.03.2024 வெள்ளி காலை 8.00 மணி | வட்டங்கள் தோறும் தேர்தல் பணிமனை திறப்பு | கொளத்தூர் கிழக்கு பகுதி 70 அ, 70, 67, 67அ, 66, 68 அ, 68 |
| 29.03.2024 வெள்ளி காலை 9.30 மணி முதல் | வட்டங்கள் தோறும் தேர்தல் பணிமனை திறப்பு | கொளத்தூர் மேற்கு பகுதி 65, 66, 64, 65 அ, 64அ, 69, 69 அ |
| 29.03.2024 வெள்ளி மாலை 4.00 மணி முதல் | பகுதி மற்றும் மாமன்ற வார்டுகளில் தேர்தல் பணிமனை திறப்பு | திரு.வி.க.நகர் வடக்கு பகுதி மற்றும் 74 ஆகிய வார்டுகள் |
| 29.03.2024 வெள்ளி மாலை 5.00 மணி முதல் | பகுதி மற்றும் மாமன்ற வார்டுகளில் தேர்தல் பணிமனை திறப்பு | திரு.வி.க.நகர் தெற்கு பகுதி மற்றும் 73, 75, 76 ஆகிய வார்டுகள் |
| 29.03.2024 வெள்ளி மாலை 6.30 மணி முதல் | வாக்கு சேகரிப்பு பிரச்சாரம் | துறைமுகம் கிழக்கு பகுதி 56, 56அ வட்டம் |

மேற்கண்ட தொகுதிகளில் நடைபெறும் பிரச்சார கூட்டங்கள் மற்றும் பணிமனை திறப்பு நிகழ்ச்சியில் கழக மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட திமுக



தென்சென்னை தொகுதி கழக வேட்பாளர் முனைவர். தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து சைதை மேற்கு பகுதி 139.அ வட்ட திமுக செயல்வீரர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் சை.மு.சேகர். தலைமையில் டி.என்.சிவமணி, எம்.எஸ்.ஹரிபாபு, இ.வரதன்,மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ்,சுமதி தீனதயாளன், பூபதி.வெங்கடேசன், வெ.புருசோத்தமன், என்.தீனதயாளன், முன்னிலையில், வி.பி. ஜானகிராமன், களக்காடி எல்லப்பன், முன்னிலையில் நடைபெற்றது. தில் பகுதி செயலாளர். எம். கிருஷ்ணமூர்த்தி பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் முதலமைச்சர் தளபதி அவர்களின் சாதனைகளைக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கி பேசினார். உடன் பொதுக்குழு உறுப்பினர். வழக்கறிஞர்.எம். ஸ்ரீதரன். சைதை. சாதிக், சைதை.த.சம்பத், ப.நரேஷ்,ஜி.ஏழுமலை, கொடி.து.சுரேஷ்பாபு, டி.கோபாலகிருஷ்ணன், எஸ். முகமது அலி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## டி.சேகர் முன்னிலை!

# திருவொற்றியூர் பாக முகவர்கள் கூட்டம்!

### சி.தசரதன் - வை.ம.அருள்தாசன் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 29 -

திராவிட நாயகர் கழகத்தலைவர் ஆணைக்கிணங்க 2024 நாடளுமன்ற தேர்தல் பணிகள் குறித்த பாக முகவர்கள் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ அறிவுரையின் பேரில் திருவொற்றியூர் மேற்கு பகுதி 2 வது வட்டம் 2332024 அன்று நடைபெற்றது.

பாகமுகவர்கள் பாக ஒருங்கிணைப்பாளர்கள் நிர்வாகிகள் கூட்டம் பகுதி கழக அறிவுறுத்தலின்படி வட்ட கழக பொறுப்பாளர் டி. சேகர் முன்னிலையில் 2 வது வட்டத்தில் நடைபெற்றது. மாநில ஆதிதிராவிட துணைச் செயலாளர் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மயிலை சி.தசரதன், திருவொற்றியூர் மேற்கு பகுதிகழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்கினார்கள்.

2 வது வட்டத்தில் கட்சி அலுவலகத்தில் வட்டக் கழக பொறுப்பாளர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் பாக ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதி எம்.சந்திரகுமார், வட்ட கழக துணை செயலாளர் ஆர். மதன்குமார் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், (BLA & 2) பாக முகவர்கள் பங்கேற்றனர். மாவட்ட பொருளாளர் எம். ஆனந்தன், பகுதி கழக பொருளாளர் எம்.வஜ்ரவேல், சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் மீண்டும் இரண்டாம் முறையாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் மருத்துவர் கலாநிதி வீராசாமி , பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற ஆற்ற பணிகள் குறித்தும், பாக முகவர்களின் பணிகள் குறித்தும் , தலைமை கழக அறிவுறுத்தலின்படி தொகுதி பொறுப்பாளர் தசரசதன், பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை .ம. அருள்தாசன் அவர்களும் வட்டக் கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் பாக ஒருங்கிணைப்பாளர்கள் , மற்றும் பாக முகவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி ந.ராம்குமார், பொன்.கோ.விஜயன், விளையாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன், பகுதி ஒருங்கிணைப்பாளர் தகவல் தொழில்நுட்ப அணி எஸ்.ராஜேஷ் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.



சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர்நகர் தெற்கு பகுதி, 137 (ஆ) வட்டத்தில் தென்சென்னை நாடாளுமன்ற கழக வெற்றி வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து சூளைப்பள்ளம் சஞ்சய் காலனி பகுதியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா, விருகம்பாக்கம் தொகுதி பார்வையாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின், பகுதிச் செயலாளர் கே.கண்ணன் ஆகியோர் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில் வட்டக் கழகச் செயலாளர் அ.கதிரேசன், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், மாவட்ட அமைப்பாளர் சசிகுமார், நிஷா சையத், உள்ளிட்ட வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.